தாழம்பூர் ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை - திரு.D.முனுசாமி அவர்கள்

ந.க.எண்: 04/2023-24 நாள்: 16.03.2024

பொருள் - மனைப்பிரிவு - திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம், தாழம்பூர் ஊராட்சி மற்றும் தாழம்பூர் கிராமம், M/s.Felixa Builder Private Limited என்பவரின் சர்வேஎண்: 6/4,6,9/7,27/2A2-ல் 8430ச.மீபரப்பில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது - திட்ட அனுமதி அளித்து உத்தரவிடுதல் - சார்ந்து.

பார்வை - 1. Joint Director / Deputy Director / Assistant Director, Town and Country Planning Department (Planning Permission) ROC No: UWMVVXVO/2024/DTCP Dated 11.03.2024.

2. தான பத்திர எண்: 5025/2024,நாள்: 06.03.2024.

3.தாழம்பூர் ஊராட்சி மன்றத் தீர்மானம் எண்: 164/2023-24. நாள்: 04.03.2024. ரசீது எண்: 431b386b-40e2-9010-280935d4bfe2, நாள்: 16.03.2024.

*******

உத்திரவு

திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம், தாழம்பூர் ஊராட்சி மற்றும் தாழம்பூர் கிராமம், **M/s.Felixa Builder Private Limited** என்பவரின் சர்வேஎண்: 6/4,6,9/7,27/2A2-ல் 8430ச.மீபரப்பில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு, Joint Director / Deputy Director / Assistant Director, Town and Country Planning Department (Planning Permission) ROC No: UWMVVXVO/2024/DTCP Dated 11.03.2024. அவர்களின் நடவடிக்கைகளின்படி, ம.வ./மா.உ.தி.கு.(செ.மா) எண்.53/2024 என எண்ணிடப்பட்டு, தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, பார்வை 2-ல் காணும் இவ்வலுவலக கடிதத்தின்படி, வளர்ச்சிக்கட்டணம் ரூ.4,55,700/- (ரூபாய் நான்கு லட்சத்து ஐம்பத்தைந்தாயிரத்து எழுநூறு மட்டும்) ஊராட்சியில் செலுத்தியமைக்கான வரவு ரசீது எண்: 431b386b-40e2-9010-280935d4bfe2, நாள்: 16.03.2024. மற்றும் கீழ்காணும் நிபந்தனைகளின் அடிப்படையில் இம்மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1. நகர் ஊரமைப்பு துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி மற்றும் திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நிலஉரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி மற்றும் திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகாரபத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே



For FELIXA BUILDER PVT LTD

Authorised Signatory

சரிபார்க்கப்படுகிறது. எனவே நிலஉரிமை சான்றுகள் தவறென கண்டறியப்பட்டால் இவ்வுத்தரவு இரத்தானதாக கருதப்படும்.

2. மேற்படிமனைப்பிரிவில் தானபத்திரம் மூலம் பெறப்பட்டபகுதிகளில் சாலைகள், குடிநீர், தெருவிளக்குகள் மற்றும் வடிகால் வசதிகள் மனுதாரரே சொந்த செலவில் அமைத்து தரவேண்டும்.
3. எந்த ஒரு அடிப்படை வசதிக்கான கட்டமைப்பு பணி முடிவுற்ற பின்னர் இவ்வொன்றிய பொறியாளரிடம் அதற்கான தரச்சான்று பெற வேண்டும்.
4. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். மேலும் அதன் மேல் வேறுயாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ள வேண்டும்.
5. மனைப்பிரிவில் அமையும் ஒப்படைப்பு செய்யப்பட்ட சாலைகளை தடைசெய்யாமல் புழக்க சாலையாக நிலைநிறுத்தப்பட வேண்டும்.
6. இம்மனைப்பிரிவில் கட்டணங்கள் தொடர்பாக ஏதேனும் தணிக்கைத்தடை ஏற்படின், அதற்கான இழப்பீட்டுத் தொகையை மனுதாரரிடமிருந்து வசூலிக்கப்படும்.

தலைவர்
தாழம்பூர் ஊராட்சி
திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம்

பெறுநர்
M/s.Felixa Builder Private Limited
Thalambur

For FELIXA BUILDER PVT LTD

Authorisaed Signatory